# 2021



# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயற்றிறன் அறிக்கை

# Annual Performance Report

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# *2021*



## அரசாங்க தகவல் திணைக்களம்

இல. 163, கிருலப்பன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு - 05

# 2021 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# அரசாங்க தகவல் தினைக்களம

## செலவுத் தலைப்பு இலக்கம் : 210

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | |
| அத்தியாயம் 01 – நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் சாராம்சம் | 1 - 12 |
| அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு | 13 - 18 |
| அத்தியாயம் 03 – ஆண்டுக்கான முழுமையான செயலாற்றுகை | 19 - 40 |
| அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டி | 41 - 46 |
| அத்தியாயம் 05 – நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | 47 - 51 |
| அத்தியாயம் 06 – மனித வளக் கூறுகள் | 52 - 54 |
| அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை | 55 - 66 |
| முடிவு | 67 - 68 |

# அத்தியாயம் 01

## நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் சாராம்சம்

## நிறுவனக் கட்டமைப்பு / அமுல்படுத்தல் சாராம்சம்

1.1 அறிமுகம்

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கம்

1.3 பிரதான பணிகள்

1.4 நிறுவனக் கட்டமைப்பு குறிப்புகள்

1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகங்களின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

1.6 அமைச்சு / திணைக்களம் / மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள் / நிதியம்

1.7 வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கின்ற திட்டங்கள் தொடர்பான தகவல்கள் (இருப்பின்)

அ) கருத்திட்டம்

ஆ) பங்களிக்கின்ற முகவர் நிறுவனம்

இ) கருத்திட்ட மதிப்பீட்டு செலவு - ரூ.மி

ஈ) கருத்திட்டக் காலப்பகுதி

## 1.1. அறிமுகம்

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது ஏற்பட்ட இரண்டாம் உலக மகா யுத்த காலப்பகுதியில் போர்த் தொடர்பான தகவல்களை மக்கள் மத்தியில் பரிமாறிக் கொள்வதற்காக "War Information Centre" செயற்பட்டது.

உலக மகா யுத்தம் முடிவுற்றதன் பின்னர் அந்த போர்த் தகவல்களை வழங்கிய நிலையம் அரசாங்க அபிவிருத்தி தகவல்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்காக அரசாங்க தகவல் திணைக்களம் எனும் பெயரிலான நிறுவனத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பெறுபேறாக 1948 ஜூலை மாதம் 31 ஆம் திகதி சோல்பரி ஆணைக்குழுவின்

ஆலோசனை மற்றும் விதந்துரைகளுக்கு அமைய கொழும்பு காலிமுகத்திடல் செயலக தொகுதியில் முதல் தடவையாக அரசாங்க தகவல் திணைக்களம் நிறுவப்பட்டது.

ஆரம்பத்தில் அரசாங்க தகவல் திணைக்களம்,

1. செய்தி வழங்குதல் பிரிவு
2. அரசாங்க புத்தகங்கள் நிறுவனம் மற்றும்
3. அரசாங்க திரைப்படப் பிரிவு

ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும்.

அரசாங்கம் மேற்கொள்ளும் தேசிய அபிவிருத்தி பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான மூன்று பிரதான பணிகளை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு,

1. அரச அபிவிருத்தி செய்திகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்.
2. அரச வெளியீட்டுப் பணியகத்தினால் அரசின் உத்தியோகபூர்வ வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்லுதல். (அச்சிடுதல் மற்றும் வினியோகித்தல்)
3. அரசினால் நிறைவேற்றப்படும் தேசிய அபிவிருத்தி கருமங்கள் கிராம மட்டத்தில் மக்களை தெளிவூட்டுவதற்காக அரசாங்க திரைப்பட பிரிவின் மூலம் ஆவண திரைப்படங்களை தயாரித்து, காட்சிப்படுத்துதல்.

காலிமுகத்திடல் செயலக கட்டிட தொகுதியிலிருந்து நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளும் காலத்துக்கு காலம் ஆங்காங்கே நிறுவப்பட்டன. அவற்றில் ஜாவத்த நீர்ப்பாசன திணைக்கள கட்டிடம், மொரட்டுவ வெலோனா கட்டிடம், கோட்டை ட்ரான்ஸ்வரக்கர் மாளிகை, ஸ்ரீமத் பாரென் ஜயத்திலக்க மாவத்தையிலுள்ள அத்தப்பத்து கட்டிடம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 90 தசாப்தத்தில் கொள்ளுப்பிட்டி தனியார் கட்டிடத்தில் இரண்டு மாடிகளில் இயக்கப்பட்ட திணைக்களம் அந்த வேளையில் அரச திரைப்பட பிரிவு இயங்கிய பொல்ஹேன்கொட வளாகத்துக்கு கொண்டுவரப்பட்டது. அன்று தொடக்கம் அந்த வளாகத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணித்து நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளையும் ஒரே வளாகத்துக்கு கொண்டுவருவதற்கு நிறுவன தலைவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அதன் பெறுபேறாக சிறந்த சேவை வழங்கலுக்காக ஆளணியினருக்கு வழங்கப்பட்ட பரிசாக அந்த வளாகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஐந்து மாடிகளை கொண்ட புதிய ஊடக அபிவிருத்தி நிலையம் 2012 மார்ச் 30 ஆம் திகதி சுப வேளையில் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் பதவி வரை நிறுவன தலைவரின் தரம் உயர்த்தப்பட்டுள்ள போதிலும், ஆரம்பத்தில் அந்த பதவி செய்தி அத்தியட்சகர் என இருந்தது. 1948 ஆரம்ப தகவல் அத்தியட்சகர், தகவல் பணிப்பாளர் மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகம் வரை நிறுவன பிரதானியின் பதவி உயர்த்தப்பட்டுள்ளது.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக அனுபவமும், பாண்டித்தியமும் பெற்ற ஊடகவியலாளரும், பத்திரிகையாளருமான எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல அவர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிராதன தகவல் அலுவலராக நியமிக்கப்பட்டார். அத்துடன், உதவி தகவல் அலுவலர்களாக பி.என். மெத்தேகொட, எல்.ஆர். குணதிலக, எஸ்.பி. வெத்தசிங்க, பி.பீ. விஜேசிங்க ஆகியோர் பணியாற்றியுள்ளார்கள்.

அப்போது இராஜாங்க அமைச்சின் செயலாளர் பதவி வகித்த சிரேஸ்ட அமைச்சர் கலாநிதி. சரத் அமுனுகம அவர்களது எண்ணக்கருவுக்கு அமைய 1978 பெப்ரவரி 4 ஆம் திகதி தகவல் திணைக்களத்தின் முதன்மை வெளியீடான "தெசத்திய" சஞ்சிகையின் முதல் பிரதி வெளியிடப்பட்டதுடன் அது இலங்கையின் பொதுசன தொடர்பு ஊடகத்தின் திருப்புமுனையாக அமைந்தது. அது பல யுகங்களை கடந்து ஆக்கபூர்வமான மைல்கல்லை கடந்து தொடர்ச்சியாக மனதை வளப்படுத்திவரும் அச்சு ஊடகமாகும்.

தெசத்திய சஞ்சிகையினால் பெருமளவு எழுத்தாளர்கள் ஊட்டம் பெற்றார்கள். பெருமளவு வாசகர்களும் உள்ளார்கள். இந்த நாட்டின் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வோர் தொடக்கம் விவசாயிகள், தொழிலாளிகள் வரை அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்தவம் செய்து இலங்கை அரச துறையால் வெளியிடப்பட்ட ஒரேயொரு தகவல் சஞ்சிகையாகவும் "சக்வில" அமைந்தது. விஷேடமாக அரசின் கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் முதன்மைப் பொறுப்பை தோளில் சுமந்த தெசத்திய அதனையும் தாண்டிச்சென்று மக்களின் புலமைசார் புரட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றது. சமூக, பொருளாதார, கலாச்சார, கலை, சர்வதேச மற்றும் மேலும் பல துறைகள் தொடர்பான தகவல்கள் மிகவும் எளிமையான மொழிநடையில் வாசகர்களின் இரசனையை அதிகரிக்கும் வகையில் முன்வைப்பதில் தெசத்திய வெற்றி பெற்றது.

தெசத்திய சஞ்சிகைக்கு மேலதிகமாக "தகவல்" எனும் பெயரிலான வாரப் பத்திரிகையும், "Alliance" பெயரிலான ஆங்கில பத்திரிகையும் அந்த காலத்தில் வெளியிடப்பட்டது.

மிகவும் சிறிய ஆளணியினருடன் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தில் 2021 ஆண்டின் இறுதியில் நிரந்தர, ஒப்பந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் 233 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர்.

நேரடியாக பொது மக்களுக்கு செய்திகளை வழங்கும் ஊடக நிறுவனங்களுடன் தொடர்புபடும் நிறுவனம் என்பதனால் அரச நிறுவனங்களில் தகவல் திணைக்களம் சிறப்பு முக்கியத்துவமான நிறுவனமாக அமைகிறது. அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல்கள் அனைத்தும் மிகவும் சரியான தகவல்களை உள்ளடக்கியவையாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு செய்திகளை வழங்குவதுடன், ஒவ்வொரு காலப்பகுதியிலும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைய செயற்பட வேண்டியுள்ளது. 1979, 1980, 1981, 1983, 1987, 1995, 1996 மற்றும் 2000 ஆண்டுகளில் அரசாங்கம் செய்தி தணிக்கை மேற்கொண்டதுடன், அந்த சந்தர்ப்பங்களில் நாட்டில் குழப்ப நிலை நிலவியமை அதற்கான

காரணமாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் செய்தி தணிக்கை செய்வதற்கான தகுதிவாய்ந்த அதிகாரி என்ற வகையில் தகவல் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்ட கடமையாக அமைந்தது.

1993 ஆண்டில் தொலைக்காட்சி அலைவரிசைகள் முதல் தடவையாக செய்திகளை ஒளிபரப்புவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குதல் இந்த நாட்டின் ஊடக வரலாற்றில் முக்கியமான சம்பவமாக கருதலாம். அதற்கு சமாந்தரமாக பொது மக்களுக்கு தேவையான தகவல்களை இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக 1995 மே 18 ஆம் திகதி தேசிய தகவல் நிலையத்தை உருவாக்கியமை அரசாங்க தகவல் திணைக்களத்தின் மேலுமொரு நடவடிக்கையாகும். அந்த நிலையம் கொழும்பு கோட்டை, ட்ரான்ஸ்வேக்கர்ஸ் மாளிகையில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் ஊடகவியலாளர்கள் மத்தியில் நட்புறவை மேம்படுத்துவதற்காக "Press Club" அங்கே நிறுவப்பட்டது.

திணைக்களம் திடீரென ட்ரான்ஸ்வேர்க்கர்ஸ் மாளிகையிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், கொள்ளுப்பிட்டியில் இருமாடி தனியார் கட்டிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அரசாங்க பொதுசன ஊடக கட்டமைப்பில் நிலவிய மட்டுப்பாடுகளை அடையாளம் கண்டு, மேலும் அபிவிருத்தில் கருமங்களில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், விஷேடமாக அரசின் கமத்தொழில் புத்தெழுச்சி, ஜனநாயகத்தை பலப்படுத்துதல், சர்வஜன வாக்குரிமையில் மக்களின் பணி போன்ற விடயங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் போது, அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அரச திரைப்படப் பிரிவு, வெளியீட்டுப் பணியகம் போன்றவற்றினால் மிகப் பரந்த பணிகள் அந்த யுகத்தில் ஆற்றப்பட்டுள்ளன.

ஆரம்ப காலம் தொடக்கம் அரச பிரச்சார செயற்திட்டத்தை உள்நாட்டு ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நிறைவேற்றிய அரசாங்க தகவல் திணைக்களம் இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களை இலக்காக கொண்டு துண்டுப்பிரசுரங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த காலப்பகுதியில் வெளிநாட்டுத் தூதரகங்களை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்ட "Week Happening in the Island" சஞ்சிகை, "Introduction Ceylon" போன்ற வெளியீடுகள் மூலம் இலங்கை தொடர்பான விஷேட தகவல்கள் வெளிநாடுகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இலங்கை தொடர்பான தகவல்களை வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்காக "Sri Lanka Today" பெயரிலான மும்மாத சஞ்சிகை வெளியிடப்பட்டது.

அரச வெளியீட்டு பணியகமும் மிகவும் பரந்த குறிக்கோளுடன் இயங்கி அரசாங்கத்தின் சட்டங்கள் தொடர்பான உத்தியோகபூர்வ வெளியீடுகளை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்காக அச்சிட்டு வெளியிட்டு வருகிறது. அதன் ஆரம்ப அலுவலராக R.V.H.Vantwest அவர்கள் பணியாற்றியுள்ளார்.

ஜுலியோ பெற்ரோனி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரச திரைப்படப் பிரிவு, சுதந்திரத்தின் பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட தேசிய அபிவிருத்தி தொடர்பில் பொது மக்களை தெளிவுபடுத்துவதற்காக ஆவணத் திரைப்பட தயாரிப்பு மூலம் பெரும் பணி ஆற்றியுள்ளது. பிற்காலத்தில் பல புகழ்பெற்ற ஆவணத் திரைப்பட இயக்குனர்களை உருவாக்கிய இந்த பிரிவு, பாரிஸ் சர்வதேச திரைப்பட விழா போன்ற வெளிநாட்டு திரைப்பட விருது விழாக்கள் பலவற்றில் ஆவணமாக்கல், பகுதியளவில் ஆவணமாக்கல் பிரிவில் இலங்கைக்கு விருது பெற்று கொடுத்துள்ளது.

1948 ஆண்டு சுதந்திரம் பெற்றவுடன் உருவாக்கப்பட்ட திணைக்களம் மாதிரியில் பயணிக்கக்கூடிய உச்சம் வரை பயணிக்கும், தனது பயணப் பாதையில் அன்றைய நாளை விடவும் பிந்திய ஆண்டுகளில் நவீன உலகத்துக்கு பொருத்தமான வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள அரசாங்க தகவல் திணைக்களம் 2021 ஆண்டளவில் பல பிரிவுகளில் தனது சேவைகளை மேற்கொண்டு வருகிறது. அரச திரைப்பட பிரிவு, நிழற்பட பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, தெசத்திய சஞ்சிகை பிரிவு, புதிய ஊடகப் அலகு (www.news.lk), அரச வெளியீட்டுப் பணியகம், ஊடக அடையாள அட்டைப் பிரிவு, பிரச்சார பிரிவு, ஆராய்ச்சி மற்றும் புலனாய்வு பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது.

இந்த கருமங்கள் சமகால மாற்றங்களுக்கு உட்பட்டு தற்போது வரை வெற்றிகரமாக செயற்படுவதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் செயற்படுவதுடன், தற்போதுள்ள பொறிமுறை மூலம் அதற்கான இடம் கிடைத்துள்ளது என்பதும் அவதானிப்பின் போது தெளிவாகிறது.

## அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் தலைவர்கள் .....

1948 ஆண்டிலிருந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் பிரதானிகளாக தகவல் அத்தியட்சகர், தகவல் பணிப்பாளர் மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகம் ஆகிய பெயர்களில் பதவி வகித்து பின்வரும் அலுவலர்கள் செயற்பட்டுள்ளார்கள்.

1948 - திரு. பி. நடேசன்

1949 - திரு. டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல

1950 - ரி.ரி.ஆர். விவியன் ஹொரயின்

1952 - டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல

1955 - திரு. நடேசன் பரராஜசிங்கம்

1956 - திரு. லயனல் பெரேரா

1957 - திரு. ஜீ.டப்.ஏ.எம். பெரேரா

1958 - திரு. ஜேம்ஸ் பெரேரா

1959 - திரு. ரி.எம். ஜயரத்தினம்

1960 - திரு. திலக் எரங்க குணரத்ன

1961 - திரு. டப்.எல் பெர்ணான்டோ

1962 - திரு. எஸ்.பி. சேனநாயக்க

1966 - திரு. டி. அலுவிஹாரே

1967 - திரு. பி.என். மெத்தெஹொட

1968 - கலாநிதி. எஸ்.எல்.பி. அமுணுகம

1972 - திரு. பி.எம். பிரேமவர்த்தன

1974 - திரு. டப்.ஆர்.ஜீ. திலகரத்ன

1977 - எஸ். அனுர குணசேகர

1983 - திருமதி. மானெல் அபேரத்ன

1990 - திரு. கே.எஸ். விமலசேன

1991 - திரு. கே.ஆர். எல். விஜேவர்த்தன

1992 - பேராசிரியர். சுனந்த மத்தும பண்டார

1994 - திரு. ஆரிய ரூபசிங்ஹ

2003 - திரு. கே.ஏ.பீ.ஜே.பி. ஜயசேகர

2004 - திரு. டப்.எம். பியசேன

2005 - திருமதி. காந்தி விஜேதுங்க

திரு. எஸ்.டீ. பியதாஸ

2006 - ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

தகவல் பணிப்பாளர் நாயகம் பதவியில் .....

2009.02.01 தொடக்கம் 2010.05.06 வரை – திரு. ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

2009.05.07 தொடக்கம் 2015.01.08 வரை – பேராசிரியர். ஆரியரத்ன அத்துகல

2015.01.13 தொடக்கம் 2015.05.07 (பதில்) – திருமதி. கே.டப்.ரி.என். அமரதுங்க

2015.05.08 தொடக்கம் 2017.06.02 வரை – கலாநிதி. தர்ஷனி குணதிலக்க

2016.06.06 தொடக்கம் 2017.09.29 வரை – கலாநிதி. ரங்க கலன்சூரிய

2017.10.13 தொடக்கம் 2018.10.26 வரை – சட்டத்தரணி. சுதர்ஷன குணவர்த்தன

2018.10.27 தொடக்கம் இற்றைவரை – திரு. நாலக்க களுவெவ

2021.04.19 தொடக்கம் இற்றைவரை – திரு. மொஹான் சமரநாயக்க

## தூர நோக்கு

"பொறுப்புமிக்கதும் சுயாதீனதுமான ஊடக கலாசாரத்தினைப் பேணுதல்"

## பணிக்கூற்று

"இலங்கையிலுள்ள ஊடக சுற்றுச்சூழலில் பரஸ்பரம் மிக்க தொடர்பாடலை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஊடகக் கலாசாரத்தை மேம்படுத்தல். அரசாங்கத்தின் தூரநோக்கை செயற்படுத்தல் சரியான தகவல்களை வழங்குதல் பொதுமக்களின் உரிமைகளை தீர்மானிப்பதற்கான தகுந்த சந்தர்ப்பத்தினை வழங்குதல்"

## நோக்கங்கள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள், தேசிய ரீதியான முக்கியத்துவமிக்க நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டல்.
- மேம்பட்ட ஊடக கலாசாரத்தினை அபிவிருத்தி செய்தல்
- விசேட திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்களினை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட அரசாங்கத்தின் செய்திகள் மற்றும் ஆவணப் படங்களை காட்சிப்படுத்தலும் பாதுகாத்தலும்.
- உயரிய இலக்குகளை அடைவதற்காக மனிதவளங்கள் மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்தலும்.
- உலக தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு ஏற்றாற் போல், (டிஜிட்டல்மயமாக்கம்) தகவல் தொழில்நுட்பத்தினை உலகமயமாக்கலின் அடிப்படையில் முகாமைத்துவம் செய்தல்.

## 1.3 பிரதான செயற்பாடுகள்

---------- **பணிகள்** ----------


மேலே அபிவிருத்தி மட்டம் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களை பங்குபற்றச்செய்து தொடர்பாடலில் பங்களிப்பு செய்தல் பணியாகும்.

---------- செயற்திட்டங்களை சமர்ப்பித்தலின் ஒழுங்குபடுத்தல் ----------

- மூலதன நிகழ்ச்சித்திட்டங்கள்
  - குறிக்கோள்
  - சமகால முன்னேற்றம்
  - எதிர்கால எதிர்பார்ப்புகள்

- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (நாளாந்த மற்றும் குறுங்கால கருத்திட்டங்கள்)
  - அமுல்படுத்தப்படும் முறை
  - முன்னேற்றம்

## 1.4. நிறுவனக்கட்டமைப்




** அலுவலரின் பதவி இரத்து செய்யப்படும் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி பெயர்

## 1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

01. நிர்வாகப் பிரிவு
02. கணக்குப் பிரிவு
03. பிரச்சாரப் பிரிவு
04. அபிவிருத்திப் பிரிவு
05. புதிய ஊடகப் பிரிவு
06. தெசத்திய மற்றும் தெசத்திய வினியோக பிரிவு
07. புகைப்படப் பிரிவு
08. அரசாங்க திரைப்படப் பிரிவு
09. மாவட்ட ஊடக அலகு
10. ஊடக அடையாள அட்டை பிரிவு
11. டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு
12. அரசாங்க வெளியீட்டுப் பணியகம்
13. ஆராய்ச்சி மற்றும் ஊடக விசாரணைப் பிரிவு
14. நூலகம்

## 1.6 அமைச்சு / திணைக்களம் / மாகாண சபையின் கீழ் உள்ள நிறுவனங்கள் / நிதியம்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள் எதுவுமில்லை.

## 1.7 வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களின் தகவல்கள்

அரசாங்க தகவல் திணைக்களததின் வெளிநாட்டு உதவி கிடைக்கும் திட்டங்கள் எதுவுமில்லை.

# 02. அத்தியாயம்

# முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

எப்போதும் புதிய தொழில்நுட்பங்களை இணைத்து தொடர்பாடலின் புதிய தொழில்நுட்ப முன்னுரிமைகளுக்கு இணையாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தொடர்பாடலில் முதன்மையாளராக மாற்றமடைதல் அரசாங்க தகவல் திணைக்களத்தின் தொலைநோக்காகும்.

நவீன தொழில்நுட்பத்துடன் சமகாலத்தில் நாளாந்த செயற்பாடுகள் சம்பிரதாய கருமங்களையும் தாண்டிய டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் அனைத்து கருமங்களும் டிஜிற்றல் மயமாக்கலுக்கு (Digitalization) உட்பட்டு கருமங்களை மிகவும் இலகுவாக மேற்கொள்ளும் டிஜிற்றல் வெளியில் அரசாங்க தகவல் திணைக்களம் முன்னோக்கி அடியெடுத்து வைத்துள்ளது.

அனைத்து ஊடக நிறுவனங்களுடனும் வலையமைப்பை உருவாக்கி தகவல் மூலங்களாக அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருவதுடன், அரசாங்கத்தின் அனைத்து அலைவரிசைகளுக்கும் அபிவிருத்தி தகவல்களையும் வழங்குதல், அரச, தனியார் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்குதலுக்கான அரச பொறிமுறை அமுல்படுத்தப்படுகிறது.

அத்துடன் தற்போது டிஜிற்றல் வெளியில் மக்களுக்கு நம்பகமான தகவல்களை வழங்குவதில் நிலவும் பாரிய சவாலை பொறுப்பேற்று மக்களுக்கு தகவல்களை கொண்டுசெல்லும் அரங்கை இந்த ஆண்டில் உயர் மட்டத்துக்கு கொண்டுவரும் இயலுமை கிடைத்தமை அரசாங்க தகவல் திணைக்களம் பெற்ற சிறப்பான வெற்றியாகும்.

திணைக்களத்தின் கீழுள்ள இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளில் ஓராண்டு குறுகிய காலத்தில் சிறந்த பல செயற்பாடுகளை மேற்கொண்டு மக்கள் மைய தகவல் வலையமைப்பை உருவாக்கும் இயலுமை ஏற்பட்டுள்ளது.

## டிஜிற்றல்மயமாக்கலின் சிறப்பான சந்தர்ப்பங்கள்

சமூக ஊடக வலையமைப்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொய்யான தகவல்கள் உலாவுவதனால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களுக்கு கிடைக்கும் தகவல்களின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தை உறுதிப்படுத்துதல் கட்டாயமானதாகும். அதற்காக அரசாங்க தகவல் திணைக்களம் www.dgi.gov.lk, “Department of Government Information YouTube” அலைவரிசை மற்றும் Face Book மற்றும் www.newslk இணைய

தளம், YouTube அலைவரிசை மற்றும் Face Book பக்கம், Twitter ஆகிய அனைத்து வலையமைப்புகள் ஊடாக நம்பகமான தகவல்கள் நேரடியாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

**அரசாங்க தகவல் திணைக்கள டிஜிற்றல்மயமாக்கலின் சிறப்பான வெற்றிகள்**

| | நிகழ்ச்சித்திட்டங்கள் | அமுல்படுத்துதல் |
|---|---|---|
| **ஊடகங்களுக்கு வசதிகளை வழங்குதல்** | | |
| 01 | ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக cloud வெளியை பாவித்தல். | அரசாங்க தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் மூலமாக செயற்பட்டு வருவதுடன், அது பாரம்பரிய முறையில் முன்னேறிச் சென்று ஒளி நாடாக்கள், ஒலி நாடாக்கள், நிழற்படங்கள், செய்தி அறிக்கைகள் அனைத்தும் அனைத்து ஊடகங்களுக்கு ஒரே வேளையில் விரைவாக வழங்கப்படுகிறது. |
| 02 | திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடக உள்ளடக்கல்களையும் ஊடகங்களுக்கு விரைவாக வழங்குதல். | அரசினால் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடக உள்ளடக்கல்களையும் உள்ளடக்கிய அறிவித்தலுடன் காணொளிகள், ஒலி நாடாக்கள், நிழற்படங்கள் போன்ற அனைத்தையும் ஊடகங்களுக்கு வழங்குதல்.<br><br>முன்னர் அதற்காக முறைமைப்படுத்தப்பட்ட முறைமை இருக்கவில்லை என்பதுடன், தற்போது சிறப்பான ஒருங்கிணைப்பில் அனைத்து ஊடக நிறுவனங்களுடனும் சிறப்பான தொடர்பை பேணுவதற்கான இயலுமையை கொண்டிருத்தல். |
| 03 | மின்னஞ்சல் System உருவாக்குதல். | இந்த நாட்டின் அனைத்து ஊடகங்களும் அதாவது அச்சு, இலத்திரனியல், இணைய ஊடகங்கள், புதிய ஊடகங்கள், வெளிநாட்டு ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களுக்கும் 200 வரையான மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்தல். |
| 04 | அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் ஊடக அடையாள அட்டை வழங்குதல் | கோவைகளை பராமரித்து ஊடக அடையாள அட்டை வழங்கியமைக்கு மாற்றாக தரவுக் கட்டமைப்பை (Data Base) தயாரித்தல் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான கௌரவத்தை வழங்க நடவடிக்கை எடுத்தல். |
| **நேரடியாக மக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | | |
| | "Department of Government Information" YouTube ஒளிபரப்பை இயக்குதல். | Department of Government Information You Tube மூலம் அலைவரிசை 2019 ஜனவரி மாதத்திலிருந்து இயங்கா நிலையில் 12 நேயர்களை மட்டுமே கொண்டிருந்ததுடன், அந்த ஆண்டின் இறுதியில் 1000 த்துக்கு கூடுதலானோர் அதில் இணையும் நிலைக்கு முன்னேறியது. 2021 நேயர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது. அதன்போது பல தலைப்புகளில் காணொளிகள் தயாரித்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது, INFO News, INFO Highlights, உள்ளக (Inside), INFO News Parliament Highlights, Provincial Highlights, Taller, Documentary, |

| | | |
|---|---|---|
| | | Short video Reel போன்றவையாகும். இவை அனைத்தும் திணைக்களம் பெற்ற சிறப்பான வெற்றிகளாகும். உள்நாட்டு – வெளிநாட்டு மக்கள் இந்த YouTube அலைவரிசையுடன் இணைந்திருந்ததுடன் அதற்கு மக்களின் உயர் பாராட்டு கிடைத்தது. |
| | "Department of Government Information" Facebook பக்கத்தை இயக்குதல். | தற்போது திணைக்களத்தின் face book உடன் பெருமளவானோர் (like) இணைந்துள்ளனர். உள்ளடக்கத்தை முறைப்படி பதிவெற்ற நடவடிக்கை எடுத்ததிலிருந்து like, people reached, engage எண்ணிக்கை நாளாந்தம் உயர் மட்டத்துக்கு வந்துள்ளது. சமகால மற்றும் அபிவிருத்தி கொள்கைகள் அடங்கிய காணொளிகள் (You Tube அலைவரிசையின் அனைத்து காணொளிகள்) ஆக்கபூர்வமான post மற்றும் நிழற்படங்கள் சுருக்க விபரத்துடன் அதில் இற்றைப்படுத்தப்படுகிறது. தற்போது ஒரு வாரத்தில் இரு இலட்சத்துக்கு கூடுதலான reached எண்ணிக்கையை பேணும் ஆற்றல் கிடைத்துள்ளது. |
| | www.news.lk web இணையத்தளம் | சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள் அனைத்தும் இந்த இணையதளத்தின் ஊடாக இற்றைப்படுத்தல் மும்மொழிகளில் மேற்கொள்ளப்படுவதுடன், 24 மணித்தியாலமும் இற்றைப்படுத்தப்படும் அரச உத்தியோகபூர்வ இணையத் தளமாகும். இந்த இணையதளத்தின் கீழ் Face book பக்கம், You Tube அலைவரிசை, twitter பக்கமும் இயங்குகிறது.<br><br>அத்துடன் அமைச்சரவை ஊடக சந்திப்பு உள்ளிட்ட விஷேட ஊடக சந்திப்புகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுதல் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு உயர்ந்தளவு பதில்வினையாற்றல் கிடைத்து வருகிறது. |
| | தெசத்திய | சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள், வெளிநாட்டு செய்திகளை உள்ளடக்கிய 44 ஆண்டுகால வரலாற்றை கொண்ட மக்களுக்கு தகவல் வழங்கும் சஞ்சிகையை உரிய வகையில், உரிய திகதியில் வெளியிட நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளது. இருப்பினும் கொவிட் - 19 பெருந்தொற்றுக் காலத்தில் பல மாதங்கள் நிறுவனத்தின் செயற்பாடுகள் சீர்குலைந்திருந்த வேளையில் கூட வீட்டிலிருந்து கடமையாற்றி 2021 ஆண்டில் மிகவும் உயர்தரமான 16 தெசத்திய சஞ்சிகைகள் அச்சிடப்பட்டன. தெசத்திய சஞ்சிகையை வினியோகம் லேக்ஹவுஸ் நிறுவனத்துடன் ஒப்படைக்கப்பட்டு, நாடு தழுவிய ரீதியில் முறையான |

| | | |
|---|---|---|
| | | வினியோக வலையமைப்பின் ஊடாக சஞ்சிகை வாசகர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| **ஊடக பேணுகை கட்டமைப்பை இயக்குதல்.** | | |
| | டிஜிற்றல் பேணுகை கட்டமைப்பை நிறுவுதல். | இந்த திணைக்களத்துக்கு சொந்தமாக உள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க திரைப்படங்கள், காணொளிகள், நிழற்படங்கள் போன்றவற்றை டிஜிற்றல் தொழில்நுட்பத்துக்கு மாற்றும் (Convert To Digital) திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது 100 திரைப்படங்கள் டிஜிற்றல் தொழில்நுட்பத்துக்கு convert செய்யப்பட்டு, பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக டிஜிற்றல் பேணுகை கட்டமைப்பை நிறுவுதலும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும் முதன்மையான கருமமாகும் என்பதுடன், அதன் விஷேடமான வீடியோ நாடாக்கள், நிழற்படங்களை பேணுகை செய்தல் அன்றாடம் மேற்கொள்ளப்படும் கருமங்களாக இந்த ஆண்டில் மாறியுள்ளது. |

## ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் வசதிகளை முறையாக விரிவாக்குதல்

சிறந்த சமூக நல்லிருப்புக்காக நம்பகத்துடன் உண்மைத் தகவல்களை அறிக்கையிடுவதற்காக ஊடக நிறுவனங்கள் தகவல்களைக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். அரசின் அபிவிருத்தி மற்றும் சமகால தகவல்கள் முறைமைப்படுத்தப்பட்ட முறைமை ஊடாக ஊடகங்களுக்கு தொடர்பாடல் செய்யும் செயற்திட்டத்தை அரசாங்க தகவல் திணைக்களம் மூலம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய Cloud தொழில்நுட்பத்தைப் பாவித்து அதன் ஊடாக ஊடக நிறுவனங்களுக்கு வீடியோ நாடாக்கள், நிழற்படங்கள், ஊடக அறிவித்தல் ஆகிய அனைத்தையும் விரைவாக வழங்குவதற்கான முறைமைப்படுத்தப்பட்ட முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேட வெற்றிகள்,

மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ அவர்களது "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய தரமான ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக இந்த திணைக்களத்தின் ஊடக ஆராய்ச்சி விடயத்தின் கீழ் 2021 ஆண்டில் நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1. தொழில்வாண்மையான ஊடக பாடத்தை விரிவாக்குதல், ஊடக கல்வியை மேம்படுத்துதல் மற்றும் ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மை அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்வதற்காக தொழில்வாண்மை மட்ட ஊடகவியல் கற்றல் நூல் அதாவது, ஊடக உரையாடல் நூல் வெளியிடப்பட்டது.
2. தரப்பண்புடன் கூடிய தொழில்வாண்மையான வெகுசன ஊடகக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக பல்கலைக்கழகத்தின் வெகுசன ஊடகக் கற்கைகள் பிரிவுடன் இணைந்து இலங்கையில் வெகுசன ஊடகத் துறையின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டுமென்ற அறிவியல் ரீதியான அறிவுப் பகிர்வு மற்றும் சமகாலத்தில் இலங்கையில் வெகுசன ஊடகத் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடல் மற்றும் குறித்த தகவல்களை அரசாங்கத்திற்கு வழங்கல்

3. இலங்கை வெகுசன ஊடகத் துறையின் எதிர்கால வளர்ச்சியைத் தீர்மானிப்பதற்காக பல்கலைக்கழ விரிவுரையாளர்கள், ஊடகப் பிரதானிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பிரஜைகளின் கருத்துக்களைக் கேட்டறிதல் மற்றும் குறித்த கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரல்
4. ஆரோக்கியமான, தரப்பண்புடன் கூடிய வெகுசன ஊடகக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கமைய வெகுசன ஊடகக் கல்வியை பாடசாலை மட்டத்தில் விருத்தி செய்வதற்காக பாடசாலைகளில் வெகுசன ஊடக பாடவிதானத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் அறிவு, திறன், மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்தல் மற்றும் குறித்த தகவல் தொகுதியைப் பேணிச் செல்லல்

அதன்கீழ்,

- பாடசாலைகளில் வெகுசன ஊடகக் கழக வேலைத்திட்டத்தை ஊக்குவித்தல்
- பாடசாலைகளில் வெகுசன ஊடக கழகங்களைப் பதிவு செய்தல்
- பாடசாலைகளில் வெகுசன ஊடக அலகுகளுக்கான சுவர் பத்திரிகை செய்திகள் 100 இனை வழங்கல்
- பாடசாலைகளில் வெகுசன ஊடகக் கல்வியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடக அடையாள அட்டை வழங்கல் மற்றும் தகவல்களைத் திரட்டுதல்

5. வெகுசன ஊடகக் கல்வி மற்றும் வெகுசன ஊடகவியலாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ்,
    - முப்படையினர் மற்றும் பொலிஸ் ஊடகப் பிரிவுகளில் தொழில்வாண்மையான ஊடகவியலாளர்களாக செயலாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு நடைமுறை ரீதியான வெகுசன ஊடக அறிவை வழங்கல் (ஒரு நிகழ்ச்சித்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது)

6. சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் முன்னேற்றகரமான கலாச்சாரத்தைக் கொண்ட மனிதர்களை உருவாக்குவதற்காக வெகுசன ஊடகங்களிடமுள்ள சமூகப் பொறுப்புக்களின் கீழ் மாதாந்தம் நடாத்தப்படும் திரைப்பட இரசனை நிகழ்ச்சித்தொடர் (கொவிட் 19 தொற்று நிலைமையால் 2020 ஆம் ஆண்டில் மூன்று நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன)

7. சமூக ஊடகங்களின் போக்குகளைக் கண்டறிந்து அதன் மூலம் இணையத்தளங்களை இற்றைப்படுத்தல், செய்திகளைத் தயாரித்தல், சமூக ஊடக வலையமைப்புக்களை முனைப்பாக மேற்கொண்டு செல்லல்
8. நவீன ஊடகங்கள் வாயிலாக தேர்தல் பெறுபேறுகள் வெளியிடும் நேரலை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்புக்கள் உள்ளிட்ட ஊடகக் கலந்துரையாடல்களை சமூக ஊடகங்கள் வாயிலாக நேரலையாக ஒளிபரப்புதல்
9. நீண்டகாலமாக இயங்காதிருந்த அரச உத்தியோகபூர்வ சிறு செய்திச் சேவையை மீண்டும் ஆரம்பித்து சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மேற்கொண்டு செல்லல்.

10. அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாவட்ட ஊடக அலகுகள், 25 மாவட்டச் செயலகங்களை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.
11. மாவட்ட ஊடக அலகுகளின் முகநூல் பக்கத்திற்கு செய்திகளை உள்ளீர்த்துக் கொள்வதுடன், Zoom தொழிநுட்பத்தினூடாக மாவட்ட ஊடக அலகுகளின் முன்னேற்ற மீளாய்வை நடாத்துதல்
12. மாவட்ட ஊடக அலகுகள் மூலம் ஊடகச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தல் "கிராமத்துடனான உரையாடல்" கருத்திட்டத்திற்கு ஏற்புடைய ஊடக களத்தரிசிப்புக்கள் கேகாலை, கண்டி, திருகோணமலை, களுத்துறை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் நடாத்தப்பட்டது. மேலும் சுபீட்சமான கிராமம் கருத்திட்டத்திற்கமைவான ஊடக களத்தரிசிப்பு கேகாலை மாவட்டத்தில் நடாத்தப்பட்டது.
13. மாவட்ட ஊடக அலகுகளின் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த செயல்நோக்கு செயலமர்வை நடாத்துதல்

## *சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்*

அரச கொள்கைகள், அரச அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவத்துடன் சமகால செயற்பாடுகள் மற்றும் மக்களுக்காக அரசினால் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் இத்திணைக்களத்தின் முக்கிய பொறுப்பும், பணியுமாகும். அத்துடன், உலக தொழில்நுட்ப போக்குகளுக்கு இணங்கி தகவல் தொழில்நுட்ப செயன்முறையை முகாமைத்துவத்தைச் செய்து, சுதந்திரமான மற்றும் பொறுப்பான உயரிய ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தலைமைத்துவம் வழங்குவதே முக்கிய நோக்கமாகும்.

அரசாங்கத்தின் இலக்கான "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மக்களைத் தெளிவூட்டுதல் சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் மூலம் பரந்துபட்ட அளவில் மேற்கொள்வதன் மூலம் பொதுமக்கள் சரியான தகவல்களாலும் மற்றும் அறிவாலும் மெருகூட்டுவதற்காக வெகுசன ஊடகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தெளிவான வெகுசன ஊடகக் கொள்கையை சமூகத்தில் நிறுவுவதற்கு முன்னின்று செயற்படுவதற்கு 2022 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**மொஹான் சமரநாயக்க,**
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் / கணக்கீட்டு அலுவலர்

# அத்தியாயம் - 03

## 2021 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான முழுமையான நிதி செயலாற்றுகை

## *2021 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகை*

### *3.1 நிதி செயலாற்றுகைக் கூற்று*

ஏசீஏ - எப்

2021 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகை

உண்மை

| வரவுசெலவு திட்டம் 2021 | | பதிவு | 2021 ரூ. | 2020 ரூ. | |
|---|---|---|---|---|---|
| - | வருமான வரி | | | | |
| - | உள்நாட்டு பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி | 1 | - | - | ஏசீஏ -1 |
| - | சர்வதேச வர்த்தக வரி | 2 | - | - | |
| - | வரி அல்லாத வருமானங்கள் மற்றும் பிற | 3 | - | - | |
| - | **மொத்த வருமான பெறுகை (அ)** | 4 | - | - | |
| - | வருமான வரி | | - | - | |
| - | வருமானம் அல்லாத பெறுகை | | | | |
| - | திறைசேரி கட்டுநிதி | | 328,786,100 | 236,775,000 | ஏசீஏ -3 |
| - | வைப்புகள் | | 1,368,742 | 20,959,326 | ஏசீஏ -4 |
| - | முற்பணக் கணக்கு | | 12,424,365 | 9,234,353 | ஏசீஏ - 5 |
| - | பிற பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகை (ஆ)** | | **342,579,207** | **266,968,679** | |
| - | **மொத்த வருமான பெறுகை மற்றும் மொத்த வருமானமற்ற பெறுகை இ = (அ) + (ஆ)** | | **342,579,207** | **266,968,679** | |
| | திறைசேரிக்கு பணஅனுப்பல் (இ) | | 1,256,028 | - | |
| | நிகர வருமான பெறுகை மற்றும் வருமானமல்லாத பெறுகை (ஈ) = (ஆ) – (இ) | | **341,323,179** | **266,968,679** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கழிவிடப்பட்ட : செலவுகள் | | | | |
| - | மீண்டெழும் செலவுகள் | | - | - | |
| 180,320,000 | சம்பளம், வேதனங்கள் மற்றும் பிற ஊழியர் அனுகூலங்கள் | 5 | 165,108,537 | 155,804,392 | |
| 115,025,000 | பிற பண்டங்கள் மற்றும் சேவைகள் | 6 | 95,701,873 | 81,077,889 | ஸ்ரீலீலீ-2(ii) |
| 1,500,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 1,403,139 | 1,717,002 | |
| - | வட்டி செலுத்துதல் | 8 | - | - | |
| - | பிற மீண்டெழும் செலவுகள் | 9 | - | 15,300 | |
| **296,845,000** | **மொத்த மீண்டெழும் செலவு (இ)** | | **262,213,549** | **238,614,583** | |
| | **மூலதன செலவு** | | | | |
| 63,500,000 | மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் | 10 | 18,964,137 | 20,432,358 | |
| 172,626,000 | மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல் | 11 | 61,447,644 | 5,743,484 | |
| - | மூலதன மாற்றுதல்கள் | 12 | - | - | ஏசீஏ -2(ii) |
| - | நிதிச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | 13 | - | - | |
| 5,500,000 | ஆற்றல் விருத்தி | 14 | 714,500 | 511,194 | |
| - | பிற மூலதன செலவுகள் | 15 | - | - | |
| **241,626,000** | **மொத்த மூலதன செலவு (ஈ)** | | **81,126,281** | **26,687,036** | |
| - | வைப்பு செலுத்துதல் | | 1,795,836 | 21,300,737 | ஸ்ரீலீலீ-4 |
| - | முற்பணம் செலுத்துதல் | | 12,527,049 | 9,285,036 | ஸ்ரீலீலீ-5 |
| - | பிற பிரதான பேரேட்டுக் கணக்கு செலுத்துதல் | | - | - | |
| - | பிரதான பேரேட்டு செலவு (எ) | | **14,322,884** | **30,585,773** | |
| - | மொத்தச் செலவு ஊ = (இ + ஈ- உ) | | **357,662,714** | **295,887,392** | |
| - | 2021 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி ஏ = (இ - ஊ) | | **(16,339,536)** | **(28,918,713)** | |
| | கட்டுநிதி இணக்கக் கூற்றுக்கமைய மீதி | | (16,339,536) | (28,918,713) | ஏசீஏ -7 |
| | டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டுநிதி மீதி | | - | - | ஏசீஏ -3 |
| | | | **(16,339,536)** | **(28,918,713)** | |

## *3.3 நிதி நிலை தொடர்பான கூற்று*

(எஸ்ஏ – பி)

**2021 டிசம்பர் 31 திகதியில் நிதி நிலை தொடர்பான கூற்று**

| | | உண்மை | |
|---|---|---|---|
| | **பதிவு** | **2021 (ரூ.)** | **2020 (ரூ.)** |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | ஏசீஏ-6 | 1,820,584,025 | 1,768,395,025 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்கு | ஏசீஏ -5/5(ஒ) | 37,117,831 | 37,015,148 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | ஏசீஏ -3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,857,701,856** | **1,805,410,173** |
| **தேறிய சொத்துக்கள் / ஒப்புரவு** | | | |
| திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள் | | 28,955,013 | 28,425,236 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண இருப்பு | | 1,820,584,025 | 1,768,395,025 |
| வாடகை மற்றும் வேலை முற்பண இருப்பு | ஏசீஏ -5(பீ) | - | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ -4 | 8,162,818 | 8,589,912 |
| கட்டுநிதி மீதி | ஏசீஏ -3 | - | - |
| **கட்டுநிதி மீதி** | | **1,857,701,856** | **1,805,410,173** |

07 பக்கம் தொடக்கம் 49 ஆம் பக்கம் வரையான ஏசிஎப் 1 தொடக்கம் ஏசிஎப் 7 வரை மாதிரி படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கணக்கு தகவல்கள் மற்றும் பதிவு பக்க இலக்கம் 50 தொடக்கம் 65 வரை அடங்கும் பதிவு விபரங்களும் இவ் இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கும்

பகுதிகளாகும். இந்த நிதிக் கூற்று தயாரித்தல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் போது நிதிக் கூற்றுகளின் பதிவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள வகையில் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறித்த இறுதி கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அவற்றுக்குரிய கணக்கு பதிவுகள் மற்றும் ஏனைய கணக்கு தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டள்ளது எனவும் அவை அத்தொகைகளுடன் இணங்குகின்றன எனவும் இத்தால் உறுதி செய்கிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் |
| பெயர்: அனுஷ பெல்பிட்ட | பெயர்: மொஹான் சமரநாயக்க | பெயர் : எச். ஏ. யு. ஜயலத் |
| பதவி : செயலாளர், வெகுசன ஊடக அமைச்சு | பதவி : தகவல் பணிப்பாளர் நாயகம் | |
| திகதி : 2022.02. 26 | திகதி : 2022.02. 26 | திகதி : 2022.02 . 21 |
| V.P.K. Anusha Palpita<br>Secretary<br>Ministry of Mass Media<br>163, "Asidisi Medura", Kirulapona Mawatha,<br>Polhengoda, Colombo-05. | මොහාන් සමරනායක<br>ජ්‍යෙෂ්ඨ ප්‍රවෘත්ති අධ්‍යක්ෂ ජනරාල්<br>ජ්‍යෙෂ්ඨ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තු<br>කොළඹ 05 | H. A. U. JAYALATH<br>Chief Accountant<br>Department of Government Information<br>163, Kirulapona Avenue,<br>Colombo 05. |

## *3.4 காசுப்பாய்ச்சல் கூற்று*

ஏசீஏ – சீ

**2021 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2021 (ரூ.)** | **2020 (ரூ.)** |
| **<u>தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல்</u>** | | |
| மொத்த வரிப் பெறுகை | - | - |
| கட்டணம், மிகைக் கட்டணம், அபராதம் மற்றும் உரிம இலாபம் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகை | - | - |
| பிற வருமானத் தலைப்புகளில் சேர்க்கப்பட்ட வருமானம் | 15,092,249 | 20,989,638 |
| கட்டுநிதிப் பெறுகை | 328,786,100 | 236,775,000 |
| முற்பண அறவிடல் | 9,856,343 | 6,779,043 |
| வைப்புப் பெறுகை | 1,368,742 | 20,959,326 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல் (அ)** | **355,103,433** | **285,503,007** |
| **<u>கழிவிடப்பட்ட – நிதிச் செலவுகள்</u>** | | |
| தனிநபர் சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் | 274,673,473 | 248,587,290 |
| மானியங்கள் மற்றும் மாற்றுதல் செலவுகள் | 1,403,139 | 1,717,002 |
| பிற செலவுத் தலைப்புகளுக்காக செய்யப்பட்ட செலவுகள் | 6,308,509 | 6,827,049 |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட கட்டுநிதி | 1,256,028 | - |
| முற்பண செலுத்தல் | 10,946,593 | 1,787,218 |
| வைப்பு செலுத்தல் | 1,795,836 | 21,300,737 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவான காசுப்பாய்ச்சல் (ஆ)** | **296,383,578** | **280,219,296** |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் இ = (அ) – (ஆ)** | **58,719,855** | **5,283,711** |

| | | |
|---|---|---|
| **முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்குலாபம் | - | - |
| உரித்து நீக்கும் ஒதுக்கீடு மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை | - | - |
| உப கடன்களை அறவிடுதல் | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல் (இ)** | **-** | **-** |
| **கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல்** | | |
| பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் பிற முதலீடுகளை கையகப்படுத்துதல் | 58,719,855 | 5,451,784 |
| **முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவான மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஈ)** | **58,719,855** | **5,451,784** |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)** | **(58,719,855)** | **(5,451,784)** |
| **தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)** | **0** | **(168,073)** |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| உள்நாட்டு கடன் பெறுதல் | - | - |
| வெளிநாட்டு கடன் பெறுதல் | - | - |
| கொடைகள் கிடைத்தல் | - | - |
| **நிதிச் செயற்பாடுகள் உருவான மொத்த காசுப்பாய்ச்சல் (எ)** | **-** | **-** |
| **கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல் :** | | |
| உள்நாட்டு கடன் மீளச் செலுத்துதல் | - | - |
| வெளிநாட்டு கடன் மீளச் செலுத்துதல் | - | - |
| **நிதி செயற்பாடுகளுக்கு செலவான மொத்த காசுப்பாய்ச்சல் (ஏ)** | **-** | **-** |
| **நிதி செயற்பாடுகள் உருவான காசுப்பாய்ச்சல்** | **-** | **-** |
| **நிதியின் தேறிய மாற்றங்கள்** | **0** | **(168,073)** |
| ஜனவரி 01 திகதியில் ஆரம்ப காசு மீதி | - | 168,073 |

| | | |
|---|---|---|
| டிசம்பர் 31 திகதியில் இறுதி காசு மீதி | 0 | (0) |

## 3.5 நிதிக் கூற்றுக் குறிப்பு

**அறிக்கைப்படுத்துவதற்கான அடிப்படை**

### (1). அறிக்கையிடல் காலப்பகுதி

2021 ஜனவரி 01 திகதி தொடக்கம் டிசம்பர் 31 திகதி வரையான காலப்பகுதி இந்த நிதிக்கூற்றுக்கு உரிய அறிக்கையிடல் காலப்பகுதியாகும்.

### (2). அளவிடல் அடிப்படை

நிதிக்கூற்று வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சில சொத்துக்களின் வரலாற்று கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு வழிகளில் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களில் கணக்கு தயாரித்தல் மேம்படுத்தப்பட்ட நிதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களின் பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### (3). வருமானத்தை அடையாளம் காணுதல்

பரிமாற்ற மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலப் பகுதி கருத்தில் கொள்ளப்படாமல் நிதி கிடைக்கும் காலப்பகுதியில் வருமானமாக அடையாளம் காணப்படுகிறது.

### (4). ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அடையாளம் காணுதல் மற்றும் அளவிடுதல்

சொத்துக்களுக்கு உரிய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்துக்கு கிடைக்குமென உறுதி செய்யப்பட்டுள்ள போதும், அச்சொத்துக்களை நம்பகமாக அளவிடலாம் எனின், அச்சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்படும்.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் அடையாளம் காணப்படுவதுடன், கிரய மாதிரிக்கு உரியதல்லாத சந்தர்ப்பத்தில் மீள மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமான பாவிக்கப்படுகிறது.

### (5). ஆதனங்கள், கிரயம் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கு

இந்த ஒதுக்கு கணக்கு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்குகளாகும்.

### (6). காசு மற்றும் காசுக்குச் சமமானவை

2021 டிசம்பர் 31 திகதியில் கையிலுள்ள உள்நாட்டு பாவனை நாணய தாள்கள் மற்றும் நாணய குற்றிகளிலான காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளை கொண்டதாகும்

## *3.6 வருமான திரட்டல் செயலாற்றுகை*

**ரூ.,,000**

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % ஆக |
| 20.06.02.01 | வாகனங்கள் | - | - | - | - |
| 20.06.02.02 | பிற | - | - | 166.405 | 0 |
| 20.02.01.01 | அரச கட்டிடங்கள் மற்றும் வீடுகளுக்கான வாடகை | - | - | - | - |
| 20.02.01.99 | அரச சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் - வாடகை - ஏனைய வாடகைகள் | - | - | - | - |
| 20.02.02.99 | வட்டி - பிற | 1,000 | 1,000 | 1,600.703 | 160.07 |
| 20.03.01.00 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - திணைக்கள ரீதியான விற்பனை | 1,200 | 600 | 1,239.692 | 206.62 |
| 20.03.02.99 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் நிர்வாக ரீதியான கட்டணங்கள் மற்றும் நானாவித செலுத்துகை | - | 7 | 187.263 | 2675.19 |
| 20.03.03.02 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - அபராதம் மற்றும் அரசுடமையாக்கல் - பிற | - | - | - | - |
| 20.03.99.00 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - பிற பெறுகைகள் | 500 | 150 | 480.829 | 320.55 |
| 20.05.99.00 | விலகல்களின் ஒதுக்கீடு, தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய உரிமமளித்தல்கள் | - | - | - | - |

## 3.7 ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை பாவித்தலின் செயலாற்றுகை

ரூ.,000

| நிதி ஒதுக்கீட்டு வகை | செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி நிதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | ரூ.296,845,000.00 | ரூ.296,845,000.00 | ரூ.262,213,548.21 | 88.33 |
| மூலதன | ரூ.241,626,000.00 | ரூ.241,626,000.00 | ரூ.81,126,281.73 | 33.58 |

## 3.8 இ நி.ஒ 208 க்கு அமைய, ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

ரூ,000

| தொ. இல | நிதி ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம் | நிதி ஒதுக்கீட்டு குறிக்கோள் | நிதி ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு, வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப நிதி ஒதுக்கீடு | இறுதி நிதி ஒதுக்கீடு | | |
| 01. | ஊடக அமைச்சு | வீத வரி செலுத்துவதற்கு | - | 560,844.00 | 560,844.00 | 100 |
| | | அமைச்சின் வரிப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 3% செலுத்துதல் | - | 150,000.00 | 111,350.60 | 74 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சின் ஊடக செயலாளர்களுக்கு அபிவிருத்தி தொடர்பாடல் பற்றி நடைமுறை ரீதியான அறிவை வழங்குகின்ற செயலமர்வின் மண்டப வசதிகள் மற்றும் உபசரிப்புச் செலவுகள் | - | 100,000.00 | 100,000.00 | 100 |
| | | பாதுகாப்பு சேவை வழங்கலுக்கான செலுத்தகை | - | 4,139,100.00 | 3,578,580.00 | 86 |
| 02. | அரச அச்சக திணைக்களம் | அவர்களது அச்சகப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 25% செலுத்துவதற்கு | - | 1,200,000.00 | 927,921.64 | 77 |
| 03. | புத்தசாசன அமைச்சு | பாதுகாப்பு சேவை வழங்கலுக்கான செலுத்துகை | - | 573,156.00 | - | 0 |
| | | | - | **6,723,100.00** | **5,278,696.24** | **79** |

## 3.9 நிதியல்லா சொத்துக்களை அறிக்கைப்படுத்துவதில் செயலாற்றுகை

ரூ.,000

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2019 திகதியில் பொருட் கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய | 31.12.2019 திகதியில் நிதிநிலை அறிக்கைக்கு அமைய | எதிர்காலத்தில் கணக்கு வைக்கப்படவுள்ள | முன்னேற்றம் % ஆக அறிக்கை செய்தல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | - | 300,848,000.00 | - | - |
| 9152 | இயந்திரங்கள் | | 288,986,024.86 | - | - |
| 9153 | காணி | | 1,227,750,000.00 | - | - |
| 9154 | தொட்டுணரா சொத்துக்கள் | | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | - | - | - |
| 9160 | மேற்கொள்ளப்படும் வேலைகள் | | 3,000,000.00 | - | - |
| 9180 | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள | | - | - | - |

## 3.10 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வாளர் தலைமையதிபதியால் சமர்பபிக்கப்பட்டகணக்காய்வு அறிக்கை ஸ்கேன் (SCAN) செய்யப்பட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளது.

**தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 03 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள்

காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்ஷ

---

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

---

**காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் பணம் மற்றும் குறுக்கு பதிவுகள் இரண்டையும் கருத்தில் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று நேரடி முறைக்கு தயாரிக்கப்பட வேண்டும். எனினும் காசுப்பாய்ச்சல் கூற்று குறுக்கு பதிவுகள் இல்லாமல் காட்டப்பட்டிருந்ததால் ரூபா 3,157,959 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான புள்ளிவிபரங்களை உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்களஹ் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு வருகிறது. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் அது தொடர்பான படிவத்தின் கீழ் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 66 மூலம் 09 செலவினக் குறியீடுகளிற்குரிய ரூபா 27,150,000 நிதியேற்பாடுகளை ஏனைய செலவினக் குறியீடுகளிற்கு மாற்றிய பின்னர் ரூபா 82,193,819 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 காரணமாக பல விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தாமை, திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களை முகாமை செய்வதன் மூலம் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல், உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்தல், உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை, தேவைப்பாடுகள் ஏற்படாமை, எதிர்பார்த்தவாறு பராமரிப்பு மேற்கொள்ளப்படாமை மற்றும் புதிய கட்டிட நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டமை என்பன சேமிப்புக்களிற்கு தாக்கமளித்திருந்தன. | மதிப்பீடுகள் சாத்தியமானளவு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் 7 செலவினக் குறியீடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,162,393 கூட்டுமொத்தமான 15 பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு 2022 பெப்ரவரி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவினக் குறியீடு 210-02-2401 இன் கீழ் 2022.04.01 இல் தொலைக் கல்வி நிறுவனத்திற்கு ரூபா 40,000 தொகை செலுத்தப்பட்டது. மீதமுள்ள பொறுப்புக்கள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) முன்னைய ஆண்டுகளிற்குரிய ரூபா 763,252 கூட்டுமொத்தமான ஆறு பொறுப்புக்கள் முன்னைய ஆண்டுகளிற்குரிய பொறுப்புக்களாகக் காட்டப்படாமல் 2022 ஆம் ஆண்டின் வாக்குப்பணப் பேரேடுகளில் பதிவு செய்யப்படும் போது மீளாய்வாண்டிற்குரிய பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தன. | அவதானிப்பு சரியானதாகும். வாக்குப்பணப் பேரேட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொறுப்புக்களை சரியாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | தொகை ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 4:1 ஆம் பிரிவின் 2:2:1 ஆம் உப பிரிவு | - | போக்குவரத்துப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவர் போக்குவரத்து பிரிவின் கடமை காலத்தில் வாகனங்களை பழுதுபார்ப்பதிலும், கோவைகளை பராமரிப்பதிலும் நடந்ததாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து நடாத்தப்படும் முதன்மை விசாரணைக்கு உட்பட்டு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு 2021 நவம்பர் 23 ஆம் திகதிய அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், 2022 மார்ச் 3 வரை அத்தகைய விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக் | தபால் பிரிவின் சட்ட உத்தியோகத்தர் திருமதி எம்.ஏ.எச். அத்துக்கொரல 2021.09.23 ஆம் திகதிய வெகுசன ஊடக அமைச்சு செயலாளரின் MMI/AD/2/1/- vol i ஆம் இலக்க கடிதத்தின் மூலம் விசாரணையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டார். | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கவில்லை. மேலும் வாகன திருத்தம் மற்றும் சேவைகளை அங்கீகரிப்பதற்கு பொறுப்பாக இருந்த பணிப்பாளர் (நிர்வாகம்) 2021 ஒக்தோபர் 26 இல் வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள் | | | | | |
| | (i) நி.பி. 571 | 7,652,315 | அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது மீளளிப்பதற்கான காலதாமதமான வைப்புக்கள் தொடர்பாகவும் ஒப்பந்தங்களிலிருந்து ஏற்பட்ட நட்டங்களை அறவீடு செய்வதற்கான ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 12 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 7,488,595 பெறுமதியான வைப்புக்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | புதிய ஊடக நிலைய நிர்மாணத்திற்குரிய பிடித்துவைத்தல் பணம் பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது. நட்டங்கள் மதிப்பிடப்பட்டு வருகின்றன. 10 இல் 9 உருப்படிகளுக்கு ஏற்கனவே நட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. உருப்படி ஒன்றின் நட்டம் அரச பொறியியல் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய பெறுமதி மதிப்பீடுகளை பெற்ற பின்னர் அறவீடு மேற்கொள்ளப்படும். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 802 (1) | - | திணைக்களத்திற்குச் சொந்தமான ஏழு வாகனங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 மாதங்கள் முதல் 15 | 2021 ஆம் ஆண்டு கொவிட் பரவியதன் விளைவாக கராஜ் (garage) மூடப்பட்டதால் கடமைகளின் | -மேற்படி- | |

| | | |
|---|---|---|
| | மாதங்கள் வரையான காலமாக விளைவற்றிருந்தன. | வரம்பு காரணமாக வாகனங்களின் ஓட்டம் மட்டுப்படுத்தப்பட்ட துடன் வாகன பழுதுபார்த்தல்களை மேற்கொள்ள முடியவில்லை. |

**2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்**

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இறந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து முறையே ரூபா 159,870 மற்றும் ரூபா 150,700 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.12.19 இல் இறந்த திரு. பீ.எஸ்.டி. பிரேமசுந்தர அவர்களின் மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 159,870 கடன் மீதி மற்றும் 2021.12.31 இல் ஓய்வுபெற்ற திரு. எம்.ஏ. ஜெயசிங்கவின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து ரூபா 150,700 தொகை என்பவற்றை இந்த வருடத்திற்குள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பதவி வறிதாக்கப்பட்ட 3 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 211,486 தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 179,740 கடன் மீதி அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 1997 ஆம் ஆண்டில் பதவி வறிதாக்கப்பட்ட திரு. ஓ.சீ.எல். சில்வா தொடர்பான ரூபா 123,475 தொகை மற்றும் 2001 ஆம் ஆண்டில் பதவி வறிதாக்கப்பட்ட திரு. எம். ஆரியரத்ன தொடர்பான ரூபா 56,265 தொகை என்பவற்றை அறவீடு செய்வது தொடர்பாக அறிவுறுத்தல்களைப் பெற்ற பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தகவல் மற்றும் பதிவேடுகளை அனுப்புவதற்கு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூபா | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

31,746 இடர் கடன் மீதி 2022 மார்ச் இற்கான கணக்குத் தலைப்பு மூலம் தீர்க்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 பெறுகை

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 பெப்ரவரி 18 இல் உள்ளவாறு 42 கணனிகளின் தேவைப்பாடு திணைக்களத்தால் இனங்காணப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பாக இரண்டு சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2021 மே 31 இல் 3 கணனிகளிற்கும் 2021 ஆகஸ்ட் 25 இல் 39 கணனிகளிற்கும் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒரு சந்தர்ப்பத்தில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருக்காததால் விலை உயர்வு காரணமாக 11 கணனிகளிற்காக ரூபா 4,189,600 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | திணைக்களத்தின் பிரிவுகளுக்காக 52 கணனிகளை கொள்வனவு செய்வதை பணிப்பாளர் நாயகம் அவதானித்திருந்தார். அவசரத் தேவையாகக் கருதி, 2021.05.24 இல் 03 கணனிகளை கொள்வனவு செய்வதற்கு கூறுவிலைகள் கோரப்பட்டன, ஏனெனில் 39 கணனிகள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளுக்கு அதிக காலம் எடுத்துக் கொள்கிறது. அதேநேரம் பெரிய பெறுகை பதிலளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட போதிலும் கொவிட் தொற்றுநோய் காரணமாக உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைப்பதில் மட்டுப்படுத்தல்கள் இருந்ததால் கூட்டங்களை நடாத்துவதில் சிரமங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் உற்பத்திப் பிரிவிற்கு 03 கணனிகளை பிரதான பெறுகையை விட குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடிந்தது. | பெறுகையை மேற்கொள்ளும் போது நிறுவனத்திற்கு அதிக நன்மை கிடைக்கும் வகையில் முடிந்தவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட போதிலும் 2022 மே 31 வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காத கணக்காய்வு ஐயவினாக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகனங்களை பழுதுபார்த்து சேவிஸ் செய்யும் செயன்முறை தொடர்பான பரீட்சிப்பு. | 2022 மார்ச் 07 ஆம் திகதிக்கு பின்னர் அனுப்பப்பட்ட 6 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றதுடன் தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் பதிலளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனங்களின் கோவைகளை பேணுவதில் உள்ள முறைகேடுகள் தொடர்பான பரீட்சிப்பு. | | |
| (இ) | திணைக்கள சேவையின் விடுவிப்பு தொடர்பான பரீட்சிப்பு. | | |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு தொடர்பான கணக்காய்வு | | |
| (உ) | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு | | |
| (ஊ) | நிதிக் கணக்காய்வு 2021 | | |

## 4. நல்லாளுகை

---

### 4.1 உள்ளக கணக்காய்வு

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (I) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 யூலை வரையிலும் திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமானது பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு நிரப்பப்பட வேண்டும். குறித்த வெற்றிடத்தை நிரப்புமாறு திணைக்களத்தினால் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அந்த பதவிக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (I) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**5. மனித வளங்கள் முகாமைத்துவம்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 330 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 232 ஆகவும் காணப்பட்டது. இதன் விளைவாக 98 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஷ்ட மட்டத்தில் உள்ள 06 வெற்றிடங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | நாடளாவிய மற்றும் இணைந்த சேவையின் வெற்றிடங்கள் தொடர்பாக, பொது நிர்வாக அமைச்சின் இணையத்தளத்தின் PACIS மென்பொருள் மூலம் நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. உரிய வழிமுறைகளைப் பின்பற்றும் போது ஏற்பட்ட காலதாமதம் காரணமாக சில திணைக்களம் சார்ந்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கால அவகாசம் எடுக்கப்பட்டது. மேலும் 2021.09.21 ஆம் திகதிய MMI/5/7/Com – Vol 1 ஆம் இலக்க வெகுசன ஊடக அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மூலம் மறு அறிவித்தல் வரும் வரை 2021.09.01 முதல் புதிய ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | தற்போதுள்ள பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

# அத்தியாயம் 04

## செயலாற்றுகை சுட்டிகள்

# செயலாற்றுகை சுட்டி

## *4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய)*

| விசேட சுட்டிகள் | எதிர்பார்க்கும் அடைவுகளின் வீதம் (%) ஆக உண்மை அடைவுகள் | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| அறிக்கை திரைப்படத் தயாரிப்பு, குறுங்காணொளித் தயாரிப்பு, உரையாடல் நிகழ்ச்சிகள், பரப்புரை விளம்பரங்கள் தயாரிப்பு | - | - | 58% |
| ஊடகப் பதிவுகள் | 105.9% | - | - |
| இணையத்தளத்திற்கான நேரலைப் பதிவு நிகழ்ச்சிகள் | 6450% | - | - |
| அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு, சைகைமொழி தயாரிப்பு, தமிழ் மொழி நிகழ்ச்சிகள் தயாரிப்பு | 256% | - | - |
| ஊடக அறிவித்தல் மற்றும் உத்தியோகபூர்வ ஊடக வெளியீடுகள் | - | 75% | - |
| விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பரப்புரை நடவடிக்கைகள் | - | 75% | - |
| அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகக் கலந்துரையாடல் ஏற்பாடுகள் | 95% | - | - |
| அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டங்கள் பற்றிய ஊடக சந்திப்புக்கள் ஒழுங்குபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்திகளை வெளியிடல் | - | 75% | - |
| வேறு நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற ஊடகச் சந்திப்புக்களை ஒருங்கிணைப்பு செய்தல் | - | 75% | - |

| | | | |
|---|---|---|---|
| அரசாங்க உத்தியோகபூர்வ ஊடக அறிவித்தல்களை ஊடகங்களுக்கு வெளியிடல் | 100% | - | - |
| அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய ஊடகக் கண்காணிப்பு தரிசிப்புக்களை ஏற்பாடு செய்தல் | - | - | 50% |
| ஊடகப் பதிவுகளை ஒருங்கிணைப்பு செய்தல் | 100% | - | - |
| மாவட்ட மட்டத்தில் செய்திகளை வெளியிடல் | 100% | - | - |
| கட்டுரைகளை வெளியிடல் | 100% | - | - |
| மாவட்ட ஊடக அலகுகள் மூலம் ஊடகக் களத்தரிசிப்புக்களை ஒழுங்குபடுத்தல் | - | - | 23% |
| தொலைபேசி பெயர்ப்பட்டியலைத் தயாரித்தல் | - | - | 0% |
| விசேட சந்தர்ப்பங்களின் போது அறிக்கைக் காணொளிகளை மாவட்ட ஊடக அலகின் மூலம் காட்சிப்படுத்தல் | - | - | 0% |
| பிராந்திய ஊடகவியலாளர்களின் பெயர்ப்பட்டியல் இடாப்பை இற்றைப்படுத்தல் | 100% | - | - |
| பிராந்திய செய்திகளை முகநூல் பக்கத்தில் பகிர்தல் | 100% | - | - |
| ஊடக அலகுகளின் உத்தியோகத்தர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் | - | - | 40% |
| பிராந்திய வெகுசன ஊடக செயலமர்வுகள் | - | - | 0% |
| மாவட்ட ஊடக அலகுகளின் உத்தியோகத்தர்களுக்கான செயலூக்க செயலமர்வுகள் | 100% | - | - |
| தேசிய ஊடக சஞ்சிகை இதழ்கள் இரண்டு ஆறுமாத்திற்கொருமுறை அச்சிடல் | - | - | 50% |

| | | | |
|---|---|---|---|
| நாளாந்த ஊடக அறிக்கையை (தொலைக்காட்சி இரவுச் செய்திகள் மற்றும் சமூக ஊடகச் செய்திகள் மற்றும் நாளாந்த செய்திகளாக) தயாரித்தல் | 100% | - | - |
| பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆய்வுகள் தொடராய்வு | - | 75% | - |
| வெகுசன ஊடக ஆய்வுகள் பிரிவை மேம்படுத்தலுக்காக பல்கலைக்கழக வெகுசன ஊடகக் கற்கைகள் பிரிவுடன் இணைந்து செயலாற்றுதல் | - | 75% | - |
| ஊடகம் மற்றும் தொடர்பாடல் கல்வியை கற்கின்ற (சிங்கள மொழி மூலம்) பாடசாலை மாணவர்கள் தொடர்பாடல் மற்றும் ஊடக அறிவை அதிகரிக்கும் நோக்கில் Zoom தொழிநுட்பத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விரிவுரைகள் | 100% | - | - |
| பாடசாலை ஊடகக் கழகங்களுக்கு சுவர் செய்திகளை வழங்கல் | 100% | - | - |
| பாடசாலை ஊடகக் கழகங்களிலுள்ள மாணவர்களின் ஊடக அறிவை விருத்தி செய்வதற்காக தொடர்பாடல் பற்றிய நூல்களை வழங்கல் | - | 75% | - |
| க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளுக்காக ஊடகமும் தொடர்பாடலும் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கான கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தல் | 100% | - | - |
| கௌரவ ஜனாதிபதி அவர்களின் இரண்டு வருட பதவி நிறைவையொட்டி "ஜனாதிபதி ஆலோசனா" நினைவுநூல் அச்சிடல் | 100% | - | - |
| ஊடகமும் தொடர்பாடலும் பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்கல் | 100% | - | - |

| | | | |
|---|---|---|---|
| பாடசாலை ஊடகக் கழகங்களை அரசாங்க தகவல் திணைக்களத்தில் பதிவு செய்து, சான்றிதழை வழங்கல் | 100% | - | - |
| பாடசாலை மட்டத்தில் ஊடக அறிவை மேம்படுத்தல் மற்றும் நவீன வெகுசன ஊடகப் பாவனைப் போக்குகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கான Youtube தொழிநுட்பத்தினூடாக வெகுசன ஊடகக் கல்வியை வழங்கல் | 100% | - | - |
| பாடசாலை மட்டத்தில் ஊடக அறிவை மேம்படுத்தல் மற்றும் நவீன வெகுசன ஊடகப் பாவனைப் போக்குகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கான முகநூல், யூரியூப் பக்கங்களை பேணிச் செல்லல் | 100% | - | - |
| புகைப்படக் காப்பகத்திலுள்ள பழைமையான புகைப்படச் சுருள்களைப் (Negatives) பரிசீலித்தல் | - | - | 74% |
| பரீட்சிக்கப்பட்ட புகைப்படக் காப்பு (புகைப்படக் காப்பகம்) | - | 89% | - |
| அனைத்துப் புகைப்பட காப்புக்காக டிஜிட்டல் காப்பகத்திற்கு வழங்கல் | - | 89% | - |
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் வருகை, விசேட வைபவங்கள் மற்றும் அரச வைபவங்களுக்கான புகைப்படத் தொகுப்பை தயாரித்தல் | - | - | 74% |
| புகைப்பட கண்காட்சிகளை ஒழுங்குபடுத்தல் | - | - | - |
| நாட்டில் பல்வேறு இடங்களில் இடம்பெறுகின்ற விசேட சம்பவங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளைப் பதிவு செய்தல் | - | - | 74% |
| தெசத்திய சஞ்சிகையை வெளியிடல் | - | 75% | - |

| | | | |
|---|---|---|---|
| சமூக ஊடகங்கள் face book Reach இனை அதிகரித்தல் | 100% | - | - |
| Twitter, You Tube, Instagram Reach இனை அதிகரித்தல் | - | 75% | - |
| அரச டிஜிட்டல் ஊடக செயலமர்வுகள் 02 இணை நடாத்துதல் | 100% | - | - |
| Face Book boosting செய்தல் | 90% | - | - |
| ஊடக அடையாள அட்டை அச்சிடல் | 100% | - | - |
| விசேட தேவையுடையவர்களுக்கான அடையாள அட்டையை அச்சிடல் | 100% | - | - |
| அலுவலக அடையாள அட்டை அச்சிடல் | 100% | - | - |
| பாராளுமன்ற அமர்வுகளைப் பதிவு செய்கின்ற நோக்கில் பாராளுமன்ற நேரடி ஒளிபரப்பு | 100% | - | - |
| அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகக் கலந்துரையாடல் பதிவு மற்றும் அமைச்சு அபிவிருத்தி ஊடகப் பதிவு செய்தல் மற்றும் நேரடி ஒளிபரப்பு | 90% | - | - |
| மொபிட்டல் மற்றும் டயலொக் கைத்தொலைபேசி வலையமைப்பு ஊடாக தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் குறுஞ்செய்தி சேவை மூலம் செய்திகளை வழங்கல் மூலம் செய்திகளை வழங்கல் தொலைபேசி சேவைகளை விரிவாக்கம் செய்தல் | - | 70% | - |
| அரச உத்தியோகபூர்வ You Tube தளத்தின் மூலம் குறுஞ்செய்திக் காணொளி, Info News அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் குநற்திரைப்படக் காணொளிகளைப் பரப்புரை செய்தல் | - | 75% | - |

# அத்தியாயம் - 5

## நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடைதல் தொடர்பான செயலாற்றுகை

# நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைதல் தொடர்பான செயலாற்றுகை

## 5.1 அடையாளம் காணப்பட்ட ஏற்புடைய நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு / நோக்கம் | இலக்கு | அடைவுச் சுட்டிகள் | இதுவரை அடையப் பெற்ற விகிதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| அறிக்கை திரைப்படத் தயாரிப்பு, குறுங்காணொளித் தயாரிப்பு, உரையாடல் நிகழ்ச்சிகள், பரப்புரை விளம்பரங்கள் தயாரிப்பு | 115 | 67 | - | 58% | - |
| ஊடகப் பதிவுகள் | 720 | 763 | - | - | 105.9% |
| இணையத்தளத்திற்கான நேரலைப் பதிவு நிகழ்ச்சிகள் | 04 | 258 | - | - | 6450% |
| அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு, சைகைமொழி தயாரிப்பு, தமிழ் மொழி நிகழ்ச்சிகள் தயாரிப்பு | 48 | 123 | - | - | 256% |
| Network Cabling at the DGI | To fill the gap of Network | அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது (2022 ஜனவரி மாதம் 19 ஆம் திகதி) | - | 50% | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊடக அறிவித்தல் மற்றும் உத்தியோகபூர்வ ஊடக வெளியீடுகள் | பரப்புரைப் பிரிவு இக்கடமைகளை 100% வீதம் சிறப்பாக மேற்கொள்ளல். | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் சூழலில் 100% நிறைவேற்ற இயலாமல் போனாலும், 85% வீதமான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இயலுமானது. | - | - | 75% |
| விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பரப்புரை நடவடிக்கைகள் | | | - | - | 75% |
| அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகக் கலந்துரையாடல் ஏற்பாடுகள் | | | - | - | 95% |
| அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டங்கள் பற்றிய ஊடக சந்திப்புக்கள் ஒழுங்குபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்திகளை வெளியிடல் | | | - | - | 75% |
| வேறு நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற ஊடகச் சந்திப்புக்களை ஒருங்கிணைப்பு செய்தல் | | | - | - | 75% |
| அரசாங்க உத்தியோகபூர்வ ஊடக அறிவித்தல்களை ஊடகங்களுக்கு வெளியிடல் | | | - | - | 100% |
| அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றி ஊடகக் கண்காணிப்புக்கான களத்தரிசிப்புக்களை ஏற்பாடு செய்தல் | | | - | 50% | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊடகப் பதிவுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் | | | - | - | 100% |
| வரலாற்று ரீதியான பெறுமதி வாய்ந்த பழைமையான புகைப்படச் சுருள்களைப் (Negatives) டிஜிட்டல் முறைக்கு மாற்றுதல் மற்றும் டிஜிட்டல் நூலகத்திற்கு ஒப்படைத்தல் | - | - | - | 50% | - |
| அரச வெளியீடுகளை விற்பனை செய்தல் | அரச சட்டங்கள், வர்த்தமானி, ஹன்சாட் விற்பனை மற்றும் தேவைக்கேற்ப கண்காட்சி கூடங்களை நடாத்துதல் | 5.078 மில்லியன்கள் (ஆண்டுக்கான) | - | - | 75% |
| சரியான தகவல்களைத் துரிதமாக மக்களுக்கு தொடர்பூட்டல் | அரசாங்கத்தின் நிலைபெறுதகு அபிவிருத்திப ற்றிய தகவல்களின் நம்பகத்தன்மை, பரந்துபட்டளவில் தொடர்பூட்டல் | சமூக ஊடகங்கள் Face Book, Twitter, You Tube, Instagram, Reach எண்ணிக்கை அதிகரித்தல் | - | - | 100% |
| சமூக ஊடகப் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல் | சரியான பயிற்சிகள் மூலம் இப்பணிகள் பற்றிய அறிவு மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் | அரசின் டிஜிட்டல் ஊடகச் செயலமர்வுகள் 02 இனை நடாத்துதல் | - | - | 100% |
| சமூக ஊடகங்கள் வாயிலாக அதிகளவு கவனத்தை ஈர்க்கின்ற செய்திகளை தொடர்பூட்டல் செய்தல் | திணைக்களத்தின் ஊடகத்தளம் பற்றி அதிகளவானோரின் கவனத்தை ஈர்த்தல் மற்றும் தெளிவூட்டல் | Face Book boosting செய்தல் | - | - | 90% |

## *5.2 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலான வெற்றி மற்றும் சவால்கள் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.*

### நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றி :

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் பொது மக்களை தெளிவுபடுத்துதல் மற்றும் அது தொடர்பான பரந்த புரிதலை வழங்குவதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தால் YouTube மற்றும் Face book ஆகிய சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் செயன்முறை ஆரம்பமானது.

அத்துடன், நிறுவன வளாகத்தில் இதுவரைகாலம் நேர்த்தியற்ற வகையில் தயாரிக்கப்பட்டிருந்த Data & Voice Cable இலங்கை ரெலிகொம் நிறுவனத்தால் நேர்த்தியாக தயார் செய்யப்பட்டது. நடமாடும் கைத்தொலைபேசி ஊடக நிலையம் (Mobile Journalism Center / Mojo Project) கருத்திட்டத்திற்கு 100 மில்லியன் ரூபாய்கள் அனுமதிக்கப்பட்டது. அது குறிப்பிடத்தக்க வெற்றியாகும். அத்துடன் ஊடகவியலாளர் அடையாள அட்டை வழங்கும் செயன்முறை கணணிமயப்படுத்தலுக்கான மென்பொருள் இலங்கை ரெலிகொம் நிறுவனத்துடன் இணைந்து 2021 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு இயலுமை கிட்டியுள்ளமை கிடைத்த வெற்றியாகும். குறித்த தரவுத்தொகுதி மூலம் இலகுவாக தரவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு இயலுமை கிட்டியுள்ளது. அது வினைத்திறனை அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

### *சவால்கள் :*

நிலவுகின்ற போட்டியான சூழலில் சமூக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு சரியான மற்றும் நம்பகமான தகவல்களை துரிதமாக வழங்குவதற்காக தற்போதுள்ள மனிதவள மற்றும் மூலதன வளங்களின் பற்றாக்குறை சில சந்தர்ப்பங்களில் சவால் மிக்கதாக உள்ளது.

.

# அத்தியாயம் -06

## மனித வளக் கட்டமைப்பு

# மனித வளக் கட்டமைப்பு

## *06.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்*

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடம் / (மிகை) ** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 17 | 11 | 06 |
| மூன்றாம் நிலை | 16 | 02 | 14 |
| இரண்டாம் நிலை | 244 | 177 | 67 |
| ஆரம்பநிலை | 53 | 42 | 11 |

## *06.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது சுருக்கமாக காட்டப்படுகிறது.*

மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மனித வள பற்றாக்குறை திணைக்களத்தின் செயலாற்றுகையில் நேரடியாக தாக்கம் செலுத்துகிறது. குறிப்பாக தொழிநுட்ப பணிகளை மேற்கொள்கின்ற ஆளணியில் வெற்றிடம் நிலவுவதன் காரணமாக நாளாந்த கடமைகளை நிறைவேற்றும் போது சிரமங்கள் ஏற்படுகின்றது. அதாவது, திணைக்களப் பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள அறிவு மற்றும் திறமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுதல் அதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது. புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். அத்துடன் அப்பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக பதவியுயர்வு வழங்குவதில் காணப்படுகின்ற தடைகள் காரணமாகவும் தற்போது பல மட்டங்களிலுள்ள பதவிகளில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகிறது.

## *06.3 மனித வள அபிவிருத்தி*

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | நிகழ்ச்சிக்காலப்பகுதி | மொத்த முதலீடு (RS'000) | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு) | அடைவு / பெற்ற அறிவு * |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு ரூ. | வெளிநாட்டு நாணயம் | | |
| பயிற்சிப் பாடநெறிகள் | 22 | 2021.01.01திகதி தொடக்கம் 2021.12.31 | 839,000/- | - | உள்நாட்டு | அந்தந்த விடயம் தொடர்பிலும் விடய |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | திகதி வரையான காலப்பகுதியில் | | | | அறிவைப் பெறுதல் |
| பயிற்சி செயலமர்வுகள் | - | - | - | - | வெளிநாட்டு | - |

* **நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக பயிற்சிகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக தெளிவுபடுத்தப்படுகிறது.**

அரச சேவையில் புதிதாக நியமனம் பெற்ற அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் தொடர்பாக வெளிவாரி நிறுவனங்கள் மூலம் உரிய பயிற்சியை வழங்குவதன் மூலம் தமது கடமைகளை சரியாக, முறையாக மற்றும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கான இயலுமை கிடைத்துள்ளது. அத்துடன் இதன் மூலம் ஆளணியினருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அறிவை இற்றைப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்குவதன் மூலம் திணைக்களத்தின் செயலாற்றுகையை உயர் மட்டத்தக்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக அலுவலர்களை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தின் திரைப்படப் பிரிவின் கீழான செயற்பாடுகளை டிஜிற்றல்மயப்படுத்தும் இயலுமை கிடைத்துள்ளது. அதாவது, பழைய திரைப்படங்கள், ஆவணத் திரைப்படங்கள் போன்றவற்றை காப்புச் செய்வதற்காக டிஜிற்றல்மயமாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பொதுமக்கள் / ஊடகவியலாளர்கள் அல்லது தேவையான வேறு நபர்கள் தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு அல்லது பார்வையிடுவதற்கான வாய்ப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொறோனா சூழ்நிலையால், அதிகாலம், உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து கடமையாற்றியதுடன், வேறு நிறுவனங்களுக்குப் பயிற்சிக்காக அனுப்புவதில் சிரமங்கள் காணப்பட்டதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிச் செயலமர்வுகளில் ஈடுபடுத்துவது குறைவாகக் காணப்பட்டது.

# அத்தியாயம் - 7

## இணக்க அறிக்கை

# இணக்க அறிக்கை

| இல | ஏற்புடையதாக்க வேண்டிய தேவை | இணக்க நிலை (இணங்குகின்றது / இணங்கவில்லை) | இணங்கவில்லை எனின் அதற்கான சுருக்கமான தெளிவுபடுத்தல் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு உத்தேசிக்கும் சரியான தீர்மான செயன்முறை |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதிக்கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் | இணங்குகின்றது | - | - |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பண கணக்கு | இணங்குகின்றது | - | - |
| 1.3 | தொழில்முயற்சி மற்றும் உற்பத்தி முற்பண கணக்கு (வர்த்தக முற்பண கணக்கு) | ஏற்புடையதல்ல | - | - |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதல்ல | - | - |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | ஏற்புடையதல்ல | - | - |
| 1.6 | பிற | ஏற்புடையதல்ல | - | - |
| **2** | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பராமரித்தல் (நி.ஒ. 445)** | | | |
| 2.1 | 267/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய நிலையான சொத்து பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்கவில்லை | 271/2019 இலக்க அ.க.சுற்றிக்கைக்கு (நிதிக் கூற்று – 2019) மூலம் தொடர்ந்தும் குறித்த பதிவேட்டை பேணுதல் அத்தியாவசியம் அற்றது என தெரிவிக்கப்பட்டள்ளது. | |
| 2.2 | தனிநபர் சம்பள பதிவேடு / தனிநபர் சம்பள அட்டை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.3 | கணக்காய்வு ஐயவினா பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சாராம்சம் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.7 | இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.8 | மொத்த இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.9 | இழப்பு, நட்டப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.10 | பொறுப்புகள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 2.11 | உப படிவங்கள் (GA – N 20) பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை கூட்டிணைத்தல் (நி.ஒ. 135)** | | | |
| 3.1 | நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்துளிக்கப்பட்டிருத்தல். | අනුකූල වේ | - | - |
| 3.2 | நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்துளிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருத்தல். | අනුකූල වේ | - | - |
| 3.3 | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு கூடிய எண்ணிக்கையான அலுவலர்களால் அங்கீகரிக்கப்படும் வகையில் அதிகாரம் உரித்துளிக்கப்பட்டிருத்தல். | අනුකූල වේ | - | - |
| 3.4 | 2014.05.11 திகதிய 171/2004 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பளச் சிட்டை மென்பொருள் பெக்கேஜ் பாவனையின் போது கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுதல். | අනුකූල වේ | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| **4** | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்.** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் | இணங்குகின்றது | - | - |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல் | இணங்குகின்றது | - | - |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | ஏற்புடையதல்ல | - | - |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணங்குகின்றது | - | - |
| 4.5 | வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்று உரிய திகதியில் திறைசேரி செயற்பாட்டத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **5** | **கணக்காய்வு ஐயவினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள திகதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | கொவிட் - 19 தொற்று நிலைமையால் அனைத்துப் பணியாளர்களும் சமூகமளிக்காமை | தொடர்ந்துவரும் காலங்களில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.ஒ 134 (2) DMA/1-2019 இலக்கத்துக்கு அமைய ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல். | ஏற்புடையதல்ல | - | - |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதில் வழங்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | கொவிட் - 19 தொற்று நிலைமையால் அனைத்துப் பணியாளர்களும் சமூகமளிக்காமை | தொடர்ந்துவரும் காலங்களில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| 6.3 | 2018 / 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப | ஏற்புடையதல்ல | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | | | |
| 6.4 | நிதி ஒழுங்குகள்134 (3) பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதல்ல | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 அமைய, குறித்த ஆண்டில் ஆகக் குறைந்தது 4 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தியிருத்தியிருத்தல். | இணங்கவில்லை | கொவிட் - 19 தொற்று நிலைமையால் அனைத்துப் பணியாளர்களும் சமூகமளிக்காமை | தொடர்ந்துவரும் காலங்களில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றிக்கையின் 7 ஆவது அத்தியாயத்துக்கு அமைய சொத்து கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 8.2 | மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்துக்கு அமைய, அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல், ஒருங்கிணைத்தலுக்காக பொருத்தமான தொடர்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, அந்த அலுவலர் | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல். | | | |
| 8.3 | 05/2016 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய, இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 8.4 | வருடாந்த இருப்பு கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய விதந்துரைகள் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 8.5 | நி.ஒ. 272 இற்கமைய சேதமடைந்த பொருட்கள் அகற்றப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | இயங்குநிலை வாகனங்களுக்கான பயணப் பதிவு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 9.2 | வாகனம் சேதமடைந்து 06 மாத காலத்தினுள் அகற்றப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | இதற்கான செயன்முறைக்கு நீண்ட காலம் செல்கிறது. | பாவனையிலிருந்து அகற்றப்படும் வாகனங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுத்தல். |
| 9.3 | வாகன லொக் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய செயற்படுதல். | இணங்கவில்லை | ஏற்பட்டுள்ள, ஆனால் இதுவரை பரிசீலனை நடாத்தப்படாத ஒவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பிலும் பரிசீலனை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. | |
| 9.5 | 2016.12.29 திகதிய 2016/30 இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் தகனமடைதல் மீண்டும் பரிசீலிக்கப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 9.6 | குத்தகை காலப் பகுதியின் பின்னர் குத்தகை வாகன லொக் புத்தகங்களின் முழுமையான உரிமை உரித்துளிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **10** | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதியில் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு, அவை கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமான உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட முடியவில்லை. | உரிய தினத்தில் தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகள் தொடக்கம் முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகள் சீராக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 10.3 | வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் மூலம் கண்டறியப்பட்ட மற்றும் சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குகளுக்கமைய செயலாற்றி அந்நிலுவை ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக நிதி ஒழுங்குகள் பேணப்பட முடியாமல் போனமை | நிதி ஒழுங்குகளுக்கமைய செயலாற்றுதல் |
| **11** | **நிதி ஒதுக்கீடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு அவற்றின் எல்லையைக் கடந்து | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்லாத வகையில் செலவிடப்பட்டிருத்தல். | | | |
| 11.2 | நி.ஒ .94 (1) அமைய வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு எல்லையைக் கடக்காத வகையில் பொறுப்புகளுக்கு உடன்படுதல். | இணங்கவில்லை | அரசாங்கத்தின் அத்தியாவசிய பிரச்சாரங்களை மேற்கொள்ள நேரிடுவதால் ஒதுக்கீட்டு எல்லையைக் கடந்து பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வருட இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லையை மீறாமல் இருக்கும் வகையில்<br><br>பெறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு இணங்குதல். | இணங்குகின்றது | - | - |
| 12.2 | நிலுவையாக உள்ள நிலுவைக் கடன் மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 12.3 | ஒரு ஆண்டுக்கு கூடுதலான காலமாக இருக்கும் நிலுவை கடன் மீதிகள் சீராக்கல் | இணங்கவில்லை | சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எதிர்காலத்தில் உரிய காலத்தில் கடன் மீதிகளை சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| **13** | **பொது வைப்பு கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 க்கு அமைய செயற்பட்டிருத்தல். | இணங்கவில்லை | ஊடக நிலைய கட்டிடத்துக்குரிய பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை. | தக்கவைக்கப்பட்ட நிதி ஒழுங்குக்கமைய விடுவிக்க நடவடிக்கை எடுத்தல். |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தக மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு செலுத்தப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.2 | நி.ஒ 371 இற்கமைய விடுவிக்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி, குறித்த பண நிறைவடைந்து ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையில் குறித்த பணிகள் நிறைவடைந்து ஒரு மாதகாலத்தில் விடுவிக்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி சீராக்கல் செய்வதற்கு இயலாமல் போனமை | நி.ஒ 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |
| 14.3 | நி.ஒ 371 ற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட எல்லையைக் கடந்து செல்லாத வகையில் இடைக்கால கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கு மீதி, திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு அமைய, சேகரிக்கப்பட்ட வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 15.2 | சேகரிக்கப்பட வருமானம், வைப்புக் கணக்குக்கு வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 15.3 | நி.ஒ 176 ற்கு அமைய நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதல்ல | - | - |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வரையறைக்குள் ஆளணி பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 16.2 | ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் வழங்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | தற்போது நிர்வாக மற்றும் கணக்கு பிரிவு அலுவலர்களுக்கு மட்டும் வழங்கப்படுள்ளதுடன், எதிர்காலத்தில் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளினதும் அலுவலர்களுக்கு வழங்குவதற்கான கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகிறது. | |
| 16.3 | 2017.09.20 திகதிய 04/2017 இலக்க MSD சுற்றறிக்கைக்கு அமைய, | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | அனைத்து அறிக்கைகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | | | |
| **17** | **தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குதல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்களின் பாராட்டுகள் / குறைகளைத் தெரிவிப்பதற்கான வசதி வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 17.3 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 08 மற்றும் 10 ஆவது பிரிவுகளுக்கமைய ஆண்டில் இரு தடவை அல்லது ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| **18** | **பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 மற்றும் 05/2018 (1) இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றிக்கைக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுதல். | இணங்கவில்லை | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | |
| 18.2 | அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்படுதல் மற்றும் | இணங்கவில்லை | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமுல்படுத்தப்படுதல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தால் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. | | | |
| **19** | **மனித வளத் திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய 02/2018 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 2 மாதிரியின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | எதிர்காலத்தில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. | |
| 19.2 | மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு ஆண்டில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்துக்கு குறையாத பயிற்சி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | - | - |
| 19.3 | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியின் அடிப்படையில் அனைத்து ஆளணியினருக்குமான வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கையொப்பம் இடப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | எதிர்காலத்தில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. | |
| 19.4 | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கு அமைய மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல் தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் நியமிக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | தொடர்ந்து வரும் காலங்கயில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சிரேட்ட அலுவலர் ஒருவர் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது | |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கு பதிலளித்தல்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 20.1 | கடந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட கணக்காய்வு பந்திகள் மூலம் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டிருத்தல். | ஏற்புடையதல்ல | - | - |

## முடிவு :

அரச கொள்கைகள், அரசின் அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் மிக்க சமகால செயற்பாடுகள் மற்றும் மக்களுக்காக அரசினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்துதல் இந்த திணைக்களத்தின் பிரதான பொறுப்பு மற்றும் பணியாகும் என்பதுடன், மாறிவரும் உலக தொழில்நுட்ப போக்குகளுக்கு அமைவாக தகவல் தொழில்நுட்ப செயன்முறைகளை முகாமைத்துவம் செய்து, சுதந்திரமாகவும், பொறுப்புடனும் உயரிய ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல் பிரதான செயற்பாடாகும்.

இந்த கருமங்களை நிறைவேற்றுவதற்காக அதாவது, சிறந்த ஊடக சமூகத்தை உருவாக்குவதற்கு தேவையான பின்னணியை இலங்கைச் சமூகத்தில் நிறுவுவதற்கு பாவிக்கப்படும் கொள்கைகளை தயாரித்தல், திணைக்களத்தின் ஆளணி நிர்வாகம், அமைச்சு மற்றும் ஏனைய அரச, தனியார்துறை நிறுவனங்களுடன் கடமை ரீதியான உறவைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளுக்காக திணைக்களம் தனது ஆளணியை நெறிப்படுத்தும் அதேவேளை, அதன் அலுவலர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் சூழமைவு உருவாக்கி வழங்கப்படுகிறது.

இவற்றில் திணைக்களம் நிறுவுவப்பட்ட அடிப்படை குறிக்கோளை அடைவதற்காக கூடுதலான கவனம் செலுத்தப்படுகிறது. திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளினதும் குறிக்கோளை அடைவதற்காக செயற்படுத்தப்படுகிறது.

அரசின் அபிவிருத்தி செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகிபாகத்தை நிறைவேற்றி அந்த குறிக்கோளை அடைவதற்காக செயற்படும் அரசாங்க தகவல் திணைக்களம் அதற்காக பல்வேறு செயற்பாடுகளை தமது திட்டத்தில் உள்ளடக்கி ஆண்டின் ஆரம்பத்தில் அந்த திட்டத்துக்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்படுகிறது.

அதன் பின்னர் ஆண்டு முழுவதும் அந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், அதன் மூலம் அடைய முயற்சிக்கும் குறிக்கோளை அடிப்படையில் பின்வரும் வகையில் நிரற்படுத்தலாம்.

- தரநியமமான ஊடக மரபை உருவாக்குதல்.
- தகவல் அறியும் உரிமையை மேம்படுத்துவதற்காக அரசின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களிடம் கொண்டு செல்லுதல்.
- ஊடக விசாரணைச் செயன்முறையை பலப்படுத்ததல்.

- நல்லாட்சி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தியை நிறுவி கருத்து வெளிப்படுத்தல் மற்றும் பேச்சு சுதந்திரத்தை உறுதி செய்தல்.
- ஊடகத் துறைக்குரிய ஆராய்ச்சி செயற்பாடுகள், அபிவிருத்தி மற்றும் திட்மிடலை உருவாக்குதல்.

மேற்குறித்த குறிக்கோளை அடைவதற்காக திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் பிரதான செயற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ஏனைய அமைச்சுக்களால் நிறைவேற்றப்படும் கருமங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சிகள் (ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஊடக செயலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்)
- ஊடக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல். (அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பு மற்றும் ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் பணிகள் தொடர்பான)
- செய்தி அறிவித்தல்களை வெளியிடுதல்
- ஊடகக் கண்காணிப்பு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கட்டுரைகள் வெளியீடுகளை வெளியிடுதல்.
- புதிய ஊடகங்களை பாவித்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பிரச்சாரத்தை வழங்குதல். (Face Book, You Tube, Twitter etc….)
- உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்குதல்.
- நாளாந்தப் புலனாய்வு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் தேவைக்கு அமைய பொருத்தமான பிரிவுகளை தெளிவுபடுத்துதல்
- சமகால ரீதியில் முக்கியத்துவம் மிக்க தலைப்புகள் மற்றும் ஊடகத் துறையின் புதிய போக்குகள் தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.
- ஆவணத் திரைப்படங்களை தயாரித்தல் மற்றும் பிரச்சாரம் செய்தல்
- தேசிய விழாக்கள் மற்றும் பேணி பாதுகாக்க வேண்டிய நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த நிகழ்வுகளை நிழற்படம் எடுத்தல், பேணிப் பாதுகாத்தல்.

இவ்வாறு பல்வேறு விதமான வகிபாகங்கள் மற்றும் குறிக்கோள் ஊடாக அரசாங்க தகவல் திணைக்களம் தனது நாளாந்த கடமை செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாகவும், அரச கொள்கைகளை மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு சிறந்த உந்துசக்தியாக இருந்து அடுத்த ஆண்டிலும் செயற்படும்.




**රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව,**
163, කිරුළපන ඇවනිව්, පොල්හේන්ගොඩ, කොළඹ 05.

**அரசாங்க தகவல் திணைக்களம்**
இல.163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05.

**Department of Government Information**
No.163, Kirulapone Avenue, Polhengoda, Colombo 05

w w w . d i g . g o v . l k  w w w . n e w s . l k